**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 155/2015**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | DW.2 |
| NAME | துரைசாமி | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 12.03.2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. என்னை சாட்சி சொல்ல பிரகாசம் அழைத்து வந்தார் என்றால் சரிதான். பிரகாசம் எனது தம்பி. எனது இன்னொரு தம்பி பெயர் சண்முகம். எனக்கு எழுத படிக்கத் தெரியும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். எனது தாத்தா பெயர் பெருமாள் கவுண்டர். நான் பெரியபள்ளம் கிராமத்தில் இருக்கிறேன். அந்த கிராமத்தில்தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கு பக்கத்தில் எனது சொத்துள்ளது என்றால் சரிதான்.

2. எனது சொத்தின் சர்வே எண் 234/1, 234/2. வாதி சொத்தின் சர்வே எண் 234. பிரமாண வாக்குமூலத்தில் 1977, 1997 தேதிகளில் சொத்து வாங்கியதற்கு உண்டான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. மேற்சொன்ன சர்வே எண் 234/1, 234/2 ஆகிய சொத்துக்களை நாங்கள் சகோதரர்கள் ஒன்றாக அனுபவிக்கிறோம் என்றால் சரிதான். எங்களுக்குள் பாகம் பிரித்துக் கொண்டோமா என்றால் பாகம் பிரித்து பத்திரம் எழுதிக்கொண்டோம் இன்னும் பட்டா மாற்றவில்லை.

3. எப்போது பாகம் பிரித்துக் கொண்டோம் என்றால் தேதி, மாதம், வருடம் எதுவும் சரியாகத் தெரியவில்லை. எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாகம் பிரித்துக் கொண்டோம் என்ற விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 ஆவணம் என் பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். அதன்படி எங்கள் 3 பெயர் பெயரிலும் பட்டா உள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.11 பட்டா படி சொத்தை அனுபவிக்கிறோம் என்றால் சரியல்ல பத்திரப்படி அனுபவிக்கிறோம். பட்டா இடையில் தவறாக இருந்தது. பட்டா தவறாக உள்ளது என வட்டாட்சியரிடம் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரப்படி எனக்கு எவ்வளவு வந்தது என்றால் 1 ஏக்கர் 4 செண்ட் வந்தது. எனது தம்பி சண்முகத்துக்கு 1 ஏக்கர் வந்தது. மற்றொரு தம்பி பிரகாசத்துக்கு 1 ஏக்கர் வந்தது. ஆக மொத்தம் 3 ஏக்கர் 4 செண்ட் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். அப்படி என்றால் பட்டாப்படி பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான்.

5. வாதி வழக்குப் போட்டுள்ள சொத்தை வாதி அனுபவித்து வருகிறார் என்றால் வழக்குப் போட்டுள்ள 11 செண்ட்டை நான் அனுபவித்து வருகிறேன். அந்த 11 செண்ட்டை வாதிதான் அனுபவிக்கிறார் என்றாலும் அதற்காக தான் நான் பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.14 வாதி பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். அந்த பட்டாப்படி வாதி அனுபவிக்கிறார் என்றால் சரியல்ல. வாதி அவரது சொத்தை அனுபவித்து வருகிறார் என்றாலும் நானும் எனது தம்பியும் பிரகாசமும் அவரிடம் சென்று பிரச்சனை செய்கிறோம் என்றால் சரியல்ல. ஒரு மாதத்துக்கு முன்பு கூட குடித்துவிட்டு வாதியிடம் சென்று சொத்தைக் கேட்டு பிரச்சனை செய்தோன் என்றால் சரியல்ல. நாங்கள் பிரச்சனை செய்து வாதி சொத்துக்குள் செல்ல முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு பட்டாப்படி 3 ஏக்கர் 2 செண்ட் தான் பாத்தியம் என்றாலும் அதை மீறி வாதியிடம் சென்று தகராறு செய்கிறோம் என்றால் சரியல்ல.

6. வாதி அவர் சொத்தில் கரும்பு பயிரிட்டுள்ளார். அவரது சொத்தில் கிணறில்லை. தண்ணீர் எங்கிருந்து வருகிறது என்றால் பக்கத்து நிலத்தில் இருந்து வருகிறது. பக்கத்து நிலத்தில் இருந்து வாதி நிலத்திற்கு எங்கள் நிலம் வழியாக தண்ணீர் போகிறது என்றால் சரியல்ல. வாதி அவரது சொத்தை அனுபவிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். வாதி அவரது சொத்தை அனுபவிக்கிறார் என்றாலும் நாங்கள் தான் அடிக்கடி சென்று பிரச்சனை செய்கிறோம் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றாலும் அதனால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றால் சரியல்ல. நானும் எனது தம்பிகளும் எங்கள் சொத்தை அளந்து பார்த்தோமா என்றால் இல்லை. பாகம் பிரித்த போதும் அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான், பட்டாப்படி பதிவு செய்து கொண்டோம். வாதி ஹரிக்குமார் சொத்தை அளந்தார் என்றால் சரிதான். அவர் அளந்து கல் போட்டுக்கொண்டார் என்றால் சரியல்ல. வாதி சொத்தை அளந்து கல் போட்டார் என்றாலும் நானும் எனது தம்பியும் கல்லை பிடுங்கிபோட்டோம் என்றால் சரியல்ல. நானும் எனது தம்பிகளும் தாவா சொத்தில் வீண்பாத்தியம்

கேட்டு பிரச்சனை செய்கிறோம் என்றாலும் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/— K.கார்த்திக் அசாத்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.